ஏறத்தாழ 1,500 மக்கள் தொகை கொண்ட அந்தக் காலனிப் பகுதியிலே படிக்கின்ற மாணவர்கள் குறைவாக இருந்தாலும், அதைச் சிறிது கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 200 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான அரசாணைகள் கடந்த மார்ச் மாதமே வழங்கப்பட்டுவிட்டது. இருந்தாலும், இந்தப் பேரவையிலே தொடர்ந்து பல உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பக்கூடிய காரணத்தால் வரக்கூடிய ஜூன் மாதத்திலே புதிதாக டெல்லியிலே கூடவிருக்கக்கூடிய அந்த P.A.B. Meeting, - Plan and Annual Budget Meeting-லே புதிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கான அந்த முன்மொழிவுகளை அரசின் சார்பிலே எடுத்துச் செல்கிறபோது நீங்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியையும் இணைத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

சத்துணவுக் கூடம்

***27847—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், கிழுமத்தூர் ஊராட்சியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கிழுமத்தூர் குடிகாடு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி சத்துணவு மையம் NP-NSPE (National Programme of Nutritional Support to Primary Education) திட்டத்தின்கீழ் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி வேப்பூர் ஒன்றியம் கிழுமத்தூரில், 2 சத்துணவுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் ஒன்று தண்ணீர் Tank-இன்கீழ் செயல்பட்டு வருகிறது. அதைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? மேலும், தமிழ்நாட்டில் சத்துணவுக் கூடங்களில் சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் விறகு மற்றும் காய்கறிகளின் விலை உயர்வின் காரணமாக, அரசு வழங்குகின்ற நிதி போதாத காரணத்தினால், தரமான சத்துணவு வழங்கப்படவில்லை என அங்கே படிக்கின்ற மாணவர்கள் சொல்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என இந்த நேரத்திலே தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளி மாணவர்களுக்கு, ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளி மாணவர்களில் கிட்டத்தட்ட 69 இலட்சம் மாணவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடைகிறார்கள். அனைவருக்கும் தகுதியுள்ள, ஊட்டச் சத்துமிக்க உணவு, முட்டையோடுகூடிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காய்கறி மற்றும் விறகு போன்றவற்றுக்கு அரசு அளிக்கும் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கூறினார்கள். அதை அரசு பரிசீலிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்று தமிழ்நாட்டிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கெல்லாம் எரிவாயு அடுப்பு வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்பட வேண்டும்? அதேபோல, தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன? அவற்றையெல்லாம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்படுவது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் 750 மையங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 2755 மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்போது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல, சத்துணவுக் கூடங்களுக்கு, சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 9045 சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நிதி ஒதுக்கீடு

***62188—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் இந்நிதியாண்டில் ஆதி திராவிடர் நலப்